### தஞ்சையில் நாளை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட - கழகத்தினர் அணி, அணியாய்த் திரள்வீர்!

## மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அழைப்பு!





புதுக்கோட்டை, ஆக.2-

தமிழ்நாடு விவசாயிகளின் நலன்களை புறக்கணித்து, மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கோட்டை விட்ட த.வெ.க அரசை கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ள மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டத்தில் கழக தோழர்கள் திரளாக கலந்துக் கொள்ள புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை

கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க் கடன் தள்ளுபடி மோசடியை கண் டித்தும் மேகதாது பிரச்சி னையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட் டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது, காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது, கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவ விட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.சு. அரசைக் கண்டித்து நாளை (03.08.2026 திங்கட்கிழமை) காலை: 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வரவேற்புரையாற்றுகிறார். மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம். ஹெச்.ஜவாகிருல்லா. ம.ஜ.க மாநிலத் தலைவர் மாநில பொது செயலாளர் மு.தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் நெல்லை முபாரக், தி.க. இரா.ஜெயக்குமார், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் பி.சிவநேசன், மக்கள் நீதி மையம் மாவட்ட அமைப் பாளர் தர்ம.சரவணன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஏ.ஆரோக்கியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கரன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.பி, இராமலிங்கம், மாநில விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முரசொலி, கே.என்.அருண் நேரு, கவிஞர் சல்மா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜித்து, வி.என்.மணி, உள்ளிட்ட டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர். இந்த

ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு . தெற்கு மாவட்டத்தைக் சேர்ந்த விவசாய பெருங்குடி மக்கள். கழக நிர்வாகிகள், விவசாய சங்க மாவட்ட பிரதிநிதிகள் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் வட்ட கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் தவறாது கலந்து கொண்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

---

### நாளை தேவகோட்டை அருகே - முன்னாள் எம்.எல்.ஏ.

# சைதை கா.கிட்டு 15வது ஆண்டு நினைவு தினம்!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மரியாதை!

சிவகங்கை, ஆக. 2 –

சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினராகவும் மாவட்டச் செயலாளராகவும் இருந்தவர் சைதை கா.கிட்டு . இவர் கடந்த 3.8.2011ல் இயற்கை யெய்தினார். சைதை கா.கிட்டு சொந்த ஊர் தேவகோட்டை தாலுகா காரமாங்குடி கிராமமாகும்.

மறைந்த சைதை கா.கிட்டு நினைவிடம் காரமாங்குடியில் அமைந்துள்ளது. நாளை (ஆக. 3) சைதை கா.கிட்டுவின் 15 வது ஆண்டு நினைவு தினம் ஆகும். அன்றையதினம் காரமாங்குடியில் காலை 10 மணி அளவில் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் சைதை கா.கிட்டு நினைவிடத்தில் மரியாதை செலுத்தப்படுகிறது.

அன்னதானம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் நாகனிரவி, வே. பூபாலசிங்கம், தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி.பாலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், தொழிலதிபர்கள் சைதை கிட்டு மகன் கருணா கிட்டு, வி.போஸ், கா.சுப்பு மற்றும் மாவட்டம் முழுவதுமிருந்து தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள்.

---

### தஞ்சையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# அரியலூர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



அரியலூர்,ஆக, 2-

தி.மு.க. சார்பில் தஞ்சாவூரில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தியும் காவிரி உரிமையை நிலை நாட்டுவதில் த.வெ.க அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம் நாளை 3ஆம் தேதி நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொள்வீர் என்று அரியலூர் மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. சார்பில் தமிழ்நாடு விவசாய பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் தவெக அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து நாளை 03.08.2026(திங்கட்கிழமை) காலை 10.00 மணி அளவில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் இந்த ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களை சேர்ந்த தோழர்களும் பொதுமக்கள் அனைவரும் போராட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்வீர்

இவ்வாறு மாவட்ட செயலாளர் சா.சி. சிவசங்கர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!



வேலூர், ஆக. 2-

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை (03.08.2026 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணைச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) 7.8.2026 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

2) கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

# தேனி வடக்கு மாவட்ட, செயற்குழுக் கூட்டம் - கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. அறிக்கை!



தேனி, ஆக. 2-

தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் தேனி ABM ஹோட்டலில் இன்று (02.08.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி செல்லப்[பாண்டியன் தலைமையில், நடைபெற உள்ளது. மற்றும் செயற்குழு கூட்டத்திற்கு முன்பு பழனிசெட்டிபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் எனது தலைமையில் கலைஞர் நூலகம் திறப்புவிழா நடைபெற உள்ளது.

அதுசமயம், கலைஞர் நூலகம் திறப்புவிழா மற்றும் செயற்குழுக் கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுபினர்கள் மற்றும் சட்டமன்ற உறுபினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.


பொருள்:

1) கழக வளர்ச்சிப் பணிகள்

இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச் செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## வாட்ஸ் அப்பில் வலம் வருவது !




---

# காவிரி நதி நீர் உரிமையை நிலைநாட்ட தஞ்சையில் ஆர்ப்பாட்டம்!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஆக. 2-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் உயிர்நாடியான காவிரி நதிநீரை உரிய முறையில் பெற்றுத் தர வலியுறுத்தியும், மேகதாது அணை விவகாரத்தில் ஒன்றிய,மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், பயிர்க் கடன் தள்ளுபடியில் நிலவும் குளறுபடிகளை மாநில அரசு உடனடியாக களைய வலியுறுத்தியும், திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர், முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, த.வெ.க அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டனப் போராட்டம் நாளை (ஆகஸ்ட் 3) தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிறது.

இப்போராட்டத்திற்கு கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்கிறார்.

இது வெறும் அரசியல் நிகழ்வு மட்டுமல்ல; தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், மக்களின் குடிநீர் உரிமையையும் பாதுகாக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க உரிமைப் போராட்டமாகும்.

இந்த ஆர்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், வட்டம், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு, இந்த ஜனநாயக உரிமைப் போராட்டத்தை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# தமிழ்நாட்டின் அண்ணா, காந்தி காவல் பதக்கங்களை அவமதித்து டெல்லிக்குச் சேவகம் செய்யும் விஜய்!

முதலமைச்சர் தன் கைவசம் வைத்துள்ள காவல் துறையில், தமிழ்நாடு காவலர்களுக்குப் பதக்கம் வழங்கும் விழாவில், அண்ணா பதக்கமே முதன்மையானது. அதுபோலவே காந்தி காவல் பதக்கமும் மதிப்பிற்குரியது. தமிழ்நாட்டின் இந்த இரு பதக்கங்களையும் இருட்டடிப்பு செய்துவிட்டு, விழா மைதானத்தின் பின்னணியில், ‘ஒன்றிய உள்துறை அமைச்சர்’ பதக்கத்திற்கு வானளாவிய பிரம்மாண்ட பேனர்களை வைத்துள்ளார் டம்மி முதல்வர் விஜய்!





காவல்துறையினருக்கு வழங்கப்படும் அண்ணா மற்றும் காந்தி பதக்கங்களே தமிழ்நாட்டின் பெருமை. அதை விடுத்து, ஒன்றிய அரசின் பதக்கத்தை மட்டும் வெட்கமில்லாமல் முன்னிலைப்படுத்தி, பெருமைக்குரிய காக்கிச் சீருடை பதக்க விழாவில் காவி நிறத்தைக் காட்டியிருக்கிறது தவெக அரசு.

தன் மாநிலப் பதக்கத்தின் மாண்பைக் கூடக் காப்பாற்ற வக்கில்லாத இந்த அரசால், தமிழ்நாட்டின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்க முடியும்? என்று தி.மு.கழகம் இணையதளத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

---

### கள்ளக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட மருத்துவமனைகளில்

# அத்தியாவசிய மருந்துகள் - நோயறிதல் வசதிகள் கிடைப்பதன் நிலை என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 2 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள அரசு சுகாதார நிறுவனங்களான ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் (AAMs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி உட்பட, மாவட்ட வாரியாக அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோயறிதல் வசதிகள் கிடைப்பதன் தற்போதைய நிலை என்ன?

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் அத்தியாவசிய மருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கும், ஆய்வகங்களை வலுப்படுத்துவதற்கும், நோயறிதல் சேவைகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு மத்திய சுகாதாரத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன?

மாநிலத்தின் கிராமப்புற சுகாதார மையங்களில் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவப் பொருட்கள் மற்றும் நோயறிதல் வசதிகள் கிடைப்பதில் உள்ள பற்றாக்குறைகள், கையிருப்புத் தட்டுப்பாடுகள் அல்லது இடைவெளிகளை ஒன்றிய அரசு மதிப்பிட்டுள்ளதா, அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

குறிப்பிட்ட மாநிலத்தின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கிராமப்புற மக்களுக்கு, மலிவு விலையில் மருந்துகள், அத்தியாவசிய நோயறிதல் வசதிகள் மற்றும் தரமான சுகாதார சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.